முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்
OS.No.682/2022

Witness-PW-2

பெயர் – சக்திவேல்

த/பெ – செம்மனேரி

இன்று (10.2.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

நான், வாதி, மற்றும் பிரதிவாதி ஆகிய மூவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி மலர் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். அதில் எனது தந்தை பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் தந்தை பெயர் போடாததால் அந்த கையெழுத்திட்டது நான் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கொடுக்கல் வாங்கல் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது ( சாட்சி பின்னிட்டு தெரியும் என் முன்னிலையில் தான் கொடுத்தார்கள் என்று சொல்கிறார்) ரொக்கம் எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் ரூ.1,00,000/–. எந்த இடத்தில் பணம் கொடுத்தார்கள் என்றால் எங்கள் வீட்டிலிருந்து வரும் வழி முக்குட்டில் கொடுத்தார்கள். என்ன மணி இருக்கும் என்றால் 1 அல்லது ஒன்றரை இருக்கும். பாண்டில் கையெழுத்து போடச்சொல்லி யார் என்னிடம் கேட்டார்கள் என்றால் வாதி மலர் தான் கேட்டார். பிரதிவாதி சுரேஷ் எனக்கு பழக்கம் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது மன வருத்தம் எதுவும் இல்லை. வா.சா.ஆ1 பாண்டு பூர்த்தி செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியாது. முதலாவதாக சாட்சி போட்டது யார் என்றால் அவரை நான் பார்க்கவில்லை. வாதி கேட்டதன் பேரில் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் பணம் கொடுக்கல் வங்கல் பற்றி எனகது எதுவும் தெரியாது வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- A.Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge ,
Villupuram